**O.S.No. 253/2018**

**Date:11.11.2025**

பி.**வா.சா .1 சுடர்வண்ணன்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பி.வா.சா.ஆ.1 க்குரிய அசல் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை அதின் சார்பதிவாளர் நகல் தான் தாக்கல் செய்தேன். அதன் அசல் ஆவணம் துலைந்துவிட்டது. மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் பல சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் பல சொத்துகள் உள்ளதால் அசல் ஆவணத்தை வாதியிடம் எனது பாட்டி கருப்பாயம்மாள் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. எங்களுக்கு அனுப்பப்படும் அஞ்சலக தபால்களும் எங்களுக்கு தான் வரும் என்றால் சரிதான். எனக்கு வாதி தரப்பு ஆவணம் 2 க்குண்டான வழக்கறிஞர் அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டேன். மேற்படி அந்த அறிவிப்பிலேய புலஎண்.682/ப என்பதற்கு பதிலாக 679/2 என தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அதன் அடிப்படையில் பிராது தபசில் சொத்தினை வாதி அனுபவம் செய்து வருவதை இடையூறு செய்யக்கூடாது என அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்விப்பில் உள்ளது உண்மை சங்கதிகள் அல்ல. மேற்படி அறிவிப்பு உண்மையா பொய்யா என்று பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் அனுப்பியுள்ளேன். பதில் அறிவிப்பு அனுப்பியதாக ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வாதியினுடைய வழக்கறிஞர் அறிவிப்புக்கு பதில் அறிவிப்பு அனுப்பாமல் எதிர்வழக்குரையில் நான் செய்துள்ள கட்சி என்பது சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் வீடு போக தென்புறம் உள்ள பகுதி காலிமனையாக தான் உள்ளது என்றால் சரிதான்.

காலிமனையில் உள்ள கிழமேல் அளவு மற்றும் தென்வடல் அளவு சொல்லமுடியுமா என்றால் அளவுகள் தெரியாது ஆனால் மொத்தம் 6 ½ செண்ட் விஸ்தீரணம் இடம். அதில் 3 செண்டில் வீடு உள்ளது. அதுபோக மீதமுள்ள பகுதி காலிமனையாக உள்ளது அதில் முன்பகுதி காலிமனையாக உள்ளது. எனது வீட்டுக்கு முன்வாசல் வடக்கு பார்த்துதான் உள்ளது. வடக்கு வாசல் கிழமேல் தெருவை நோக்கி உள்ளது. அதேமாதிரி எனது வீட்டுக்கு தென்புறம் 6 அடி அளவில் பாதை உள்ளது என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரையிலேயே மேற்படி தென்புறம் பாதை உள்ளது என்று குறிப்பிட்டுள்ளதற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த பிராது தபசில் சொத்து வாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. வெகுகாலத்திற்கு முன்பு புல எண்கள் பற்றிய விபரம் யாருக்கும் தெரியாது என்றால் சரியல்ல. வெகுகாலத்திற்கு முன்பு புல எண் பற்றிய அறிவு இல்லாததால் 682/பா என்பதற்கு பதிலான 679/2 என தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்திற்குரிய மால்களுக்கு உட்பட்ட பகுதி 682/பா என்றால் சரியல்ல. ஏற்கனவே கிரையம் கொடுத்த சொத்தைப் பொறுத்து கிரையம் கொடுத்த நபர்களின் ஒருவரான 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட பட்டாவை வைத்து வாதியின் அனுபவத்தை இடையூறு செய்வது சட்டப்படி ஏற்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. இதனால் வழக்கு அனுமதிக்கதக்கது என்றால் சரியல்ல.